# தேவஇயல்

## திரித்துவம்

**திரித்துவம் என்றால் என்ன?**

கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனை பற்றி பேசும்போது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவராகிய திரித்துவதேவனை குறித்துப்பேசுகிறோம். இந்த திரித்துவம் என்ற வார்த்தையை நாம் வேதாகமத்தில் எங்கும் வாசிப்பதில்லை. ஆனால் தேவன் மூன்று நபர்களாக இருக்கும் ஒருவர் என்பதை நமது பரிசுத்த வேதாகமம் தெளிவாக போதிக்கிறது. இந்த திரித்துவம் என்ற போதனை கடினமானதுதான்; இதை யாரும் முழுவதுமாக புரிந்துகொள்ளமுடியாது. திரித்துவத்தை குறித்து வேதாகமம் போதிக்கின்ற காரியத்தை நாம் கவனமாக கவனித்தால் இந்த உபதேசத்தை இந்த போதனையை நாம் ஓரளவு புரிந்துகொள்ளமுடியும்.

**திரித்துவத்தின் வரையறை**

திரித்துவதின் வரையறை என்று சொல்லும்பொழுது தேவன் ஒருவராயிருக்கிறார். அந்த ஒருவர் மூன்று நபர்களாக இருக்கிறார். அந்த மூன்று நபர்களும் ஆள்தன்மை உள்ளவர்களாக இருக்கிறார்கள். திரித்துவத்தில் உள்ள பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவராகிய மூன்று நபர்களும் ஒரே சாராம்சத்தை உடையவர்களாக நித்தியமுதலே ஐக்கியமுள்ளவர்களாக காணப்படுகிறார்கள். இதை நாம் தெளிவாக மனதில் கொள்ளவேண்டும். நம்முடைய தேவன் ஒருவரில் மூவராய் இருக்கிறார்

**திரித்துவத்தை விளக்க உதவும் ஒப்புமைகள்**

இன்றைய நாட்களில் திரித்துவத்தை விளக்குவதற்கு அநேக ஒப்புமைகள் கூறப்படுகிறது. அவைகள் நமக்கு வித்தியாசமானதாகவும் சுவாரஸ்யமானதாகவும் தோன்றினாலும்கூட வரையறையற்ற தேவனை வரையறைக்குள்ளான நாம் இந்த உதாரணங்கள் மூலமாக விளக்கப்படுத்தும்போது கவனமாக இருக்கவேண்டும். வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற அளவிற்கு நாம் வேதத்தை படித்து திரித்துவத்தை விசுவாசத்தின் மூலமாக ஏற்றுக்கொள்வது நல்லது! காரணம் இந்த ஒப்புமைகள் நமக்கு வித்தியாசமானதாகவும் சுவாரஸ்யமானதாகவும் தோன்றினாலும்கூட அது நம்மை தவறான வழிகளுக்கும் விவாதங்களுக்கும் காரணமாகிவிடும் ஆகவே இவற்றை தவிர்ப்பது நல்லது.

**நாம் தவிர்க்க வேண்டிய மூன்று தவறுகள்.** இந்த மூன்று தவறுகளை குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்

A. **ட்ரைதீஸம் (Tri-theism)** - மூன்று தேவர்கள் இருக்கிறார்கள் என்பது இதனுடைய வாதம். இது வேதத்தின்படியாக தவறான கொள்கை. வேதம் தெளிவாக ஒரே தேவன் என்பதைதான் போதிக்கிறதே தவிர மூன்று தேவர்கள் என்பதை எங்குமே எப்போதுமே போதிக்கவில்லை (உபா 6:4; ஏசாயா 4:4 6; மாற்கு 12:29, 32; 1 கொரி 8:4) திரித்துவத்தில் மூன்று நபர்கள் இருக்கிறார்களே தவிர மூன்று தேவர்கள் அல்ல ஆக, இது முற்றிலுமாக தவறான ஒரு போதனை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

B. **ஏரியநிஸம் (Arianism)** – 'ஆரியன்' என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட கொள்கையே 'ஏரியநிஸம்' என்று அழைக்கப்படுகிறது. இவரின் கொள்கை 'பிதா' மட்டுமே தேவன் (யேகோவா). குமாரனும், பரிசுத்தஆவியானவரும் பிதாவினால் படைக்கப்பட்டவர்கள். அவர்கள் இடையில் வந்தவர்கள் என்பதே இவரின் கொள்கையின் வாதமாக இருக்கிறது. ஆனால் இது வேதத்தின்படியாக முற்றிலும் தவறான போதனையாகும். தேவத்துவத்தில் உள்ள மூன்று நபர்களும் நித்தியமுதலே ஐக்கியமுள்ளவர்களாக இருக்கிறார்கள்; எவரும் படைக்கப்பட்டவர்களல்ல. படைக்கப்பட்டவர்கள் சிருஷ்டிகளாக இருக்கமுடியாது. மூவரும் சமத்துவம் உள்ளவர்களாக சமநிலை உள்ளவர்களாக தேவத்துவத்தில்

காணப்படுகிறார்கள். எவருக்கும் எவரும் குறைந்தவர்கள் அல்ல (மத்தேயு 28:19; கொலோ 2:9 மத் 12:31, 32).

C. மோடலிஸம் (**Modalism**) - திரித்துவதில் இருக்கும் மூன்று நபர்களும் மூன்று நபர்கள் அல்ல என்றும் ஒரே நபர்தான் மூன்று வடிவங்களில் தோன்றுகிறார் என்றும் கூறுகின்றனர். அதாவது தண்ணீர் வெவ்வேறு வெப்பநிலையில் திரவமாகவும், பனிக்கட்டியாகவும், நீராவியாகவும் காணப்படுவதைப்போல ஒரே தேவன் வெவ்வேறு சூழ்நிலைகளில் மூன்று வெவ்வேறு வடிவங்களில் தோன்றுகிறார் என்று இந்த கொள்கையாளர்கள் கருதுகிறார்கள். ஆனால் வேதாகம போதனையின்படி திரித்துவதில் மூன்று நபர்களும் ஒருவரிலிருந்து ஒருவர் வேறுபட்டவர்கள். பிதா சிலுவையில் அறையப்படவில்லை குமாரனே சிலுவையில் அறையப்பட்டார். பெந்தேகோஸ்தே நாளில் குமாரன் விசுவாசிகள்மீது பொழிந்தருளப்படவில்லை மாறாக பரிசுத்த ஆவியானவரே பொழிந்தருளப்பட்டார். இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச்சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனைவிட்டார் (லூக்கா 23:46). இதிலிருந்து இயேசு கிறிஸ்துவானவர் தனியான நபர் என்பதை நாம் காணமுடியும். (மத்தேயு 3:16,17; 27:46; அப்போஸ்தலர் 2: 1-4, 17).

**பரிசுத்த வேதாகமத்தில் தேவனுடைய திரித்துவத்தை சுட்டிக்காட்டுவதற்கான வேத வசனங்கள்**

a. ஆதியாகமம் 1:1ல் தேவன் என்ற வார்த்தையானது எபிரேயத்தில் 'ஏலோஹிம்' என்ற பன்மையை குறிக்கும் சொல்லாகும். இந்த வசனத்தில் பின்னணியின் அடிப்படையில் அதாவது படைப்பு என்கிற பின்னணியின் அடிப்படையில், வேதம் சிருஷ்டிப்பு என்ற விஷயத்தில் மூன்று நபர்களை தான் சொல்கிறது. பிதா (ஆதியாகமம் 1:3) குமாரன் (யோவான் 1:3) பரிசுத்த ஆவியானவர் (யோபு 33:4; 26:12, 13). மேலும் தேவன் என்கிற எழுவாயானது பன்மைத்தன்மை உடையதாக இருந்தாலும் சிருஷ்டித்தார் என்ற வினைச்சொல்லில் ஒருமைத்தன்மையே உள்ளது. இது அவர்கள் ஒரே சாராம்சத்தை உடையவர்கள் என்பதை நிரூபிக்கிறது.

b. இதேபோல் ஆதியாகமம் 1:26; 3:22; 11:7; ஏசாயா 6:8 ல் தேவன், தம்மை பன்மையில் குறிப்பிடுகிறார். இதை அனேகர் மகத்துவத்திற்கு பயன்படுத்தும் ராஜரீக வார்த்தை என்று சொல்லுகிறார்கள் ஆனால் கிடையாது. உதாரணமாக: மகா சக்கரவர்த்தியாக இருந்த நேபுகாத்நேச்சார் தானியல் 4:4ல் இப்படி சொல்கிறார் "நேபுகாத்நேச்சார் ஆகிய நான் என் வீட்டிலேயே சவுக்கியம் உள்ளவனாய் இருந்து என் அரண்மனையிலே வாழ்ந்து கொண்டிருந்தேன்" இங்கே அவன் 'நாம்' என்று சொல்லாமல் 'நான்' என்று சொல்லுகிறான் (1 இராஜா 1:29, 30 - இங்கு தாவீதும் 'நாம்' என்று சொல்லாமல் 'நான்' என்று சொல்லுகிறான்). இந்த 'நாம்' என்று சொல்கிற வார்த்தையின் பயன்பாடு 14 மற்றும் 15ம் நூற்றாண்டுகளில்தான் வளர்ந்து வந்திருக்கின்றது. அதற்கு முன்பாக இப்படியான வார்த்தை உபயோகம் இல்லை. அப்படியெனில் ஆதியாகமம் 1:26ல் தேவன் சொல்வது அவருடைய திரியேக தன்மையைத்தான் வெளிப்படுத்திக்காட்டுகிறது. வேதம் நமக்கு கற்றுக்கொடுப்பதும் இந்த திரியேகத்தின் விசுவாசத்தைதான் ஆகும்.

c. ஏசாயா 48:16; மத்தேயு 28:19; 1 கொரி 6:11; 12:4- 6; 2 கொரி 1:21,22; 13:4; கலா 3:11-14; 4:6; 1 தெச 5:18,19; 1 பேதுரு 1:2 ஆகிய பகுதிகள் தேவனின் திரித்துவத்தை குறிப்பிடுவதாக இருக்கின்றன. இன்னும் அனேக வசனங்கள் வேதத்தில் உண்டு.

எபிரெயத்தில் பன்மையில் ஒருமையை காண்பிப்பதற்காகவும் ('எக்காத்'), பன்மை அல்லாத ஒருமையை காண்பிப்பதற்காகவும் ('யாக்கித்') இரண்டு வேறு வேறு வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. பல தெய்வங்களை வணங்கிக்கொண்டிருந்த இஸ்ரவேல் மக்களுக்கு முன்பாக மோசே நின்றுகொண்டு இப்படியாகச் சொன்னார்: இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் (உபாகமம் 6:4). இதே கற்பனையைதான் இயேசு கிறிஸ்துவும் மாற்கு 12:29,30 ஆகிய வசனங்களில் சொல்கிறார். ஆகவே திரித்துவ உபதேசத்தை மறுக்கின்றவர்களின் கேள்வி இதன் அடிப்படையில்தான் இருக்கிறது. மோசே

ஒரே தேவன் என்றே சொல்லியிருக்க கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும்கூட இதையேதான் சொல்லியிருக்க, நீங்கள் எப்படி வேதம் திரியேகத்துவத்தை போதிக்கிறது என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்கிறார்கள்? இதற்கான பதில் என்னவென்றால் உபாகமம் 6:4 யை நாம் வாசித்துப் பார்க்கும்போது மோசே 'ஒரே' என்று பயன்படுத்தியிருக்கின்ற பதமானது எபிரேய பாஷையில் 'எக்காத்' என்பதாகும்.

- இந்த பன்மையில் ஒருமைத்துவத்தை குறிப்பிடுகிற 'எக்காத்' என்னும் வார்த்தை ஆதியாகமம் 2:24ல் குறிப்பிடப்படுகின்றது. ஆதாமும் ஏவாளும் இரு நபர்களாக இருந்தாலும் அவர்கள் 'ஒரே' (அதாவது 'எக்காத்') மாம்சமாக இருப்பார்கள்.
- ஆதியாகமம் 11:6ல் அநேக ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள் என்று வாசிக்கிறோம். இங்கேயும் 'ஒரே' என்பதற்கு பன்மையில் ஒருமையை குறிப்பிடுகிற சொல்லான 'எக்காத்' என்ற பதமே பயன்படுத்தப்பட்டுள்ளது.
- ஆதியாகமம் 34:16ல் நாம் இரண்டு ஜனக்கூட்டமும் ஏகஜனமாக மாறுவோம் என்று சொல்லப்படுகிற கருத்திலும் 'ஏக ஜனமாய் இருப்போம்' என்பதற்கு 'எக்காத்' என்கிற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- எஸ்றா 2:64 மற்றும் 3:1லும் 42360 பேரானன ஜனங்கள் ஏகோபித்து ஒரே கூட்டமாய் அதாவது 'எக்காத்' ஆக இருந்தார்கள்.

மேலும் பன்மையை குறிப்பிடாத ஒருமையை சொல்வதற்காகவும் 'யாக்கித்' என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. இந்த வார்த்தை எபிரேய பாஷையில் பன்மையை அல்லாத ஒருமையை மட்டுமே குறிக்கும் சொல்லாக இருக்கிறது

- நியா 11:34 - அவள் அவனுக்கு ஒரே பிள்ளையானவள்
- எரேமியா 6:26 - ஒரே புத்திரனுக்காகத் துக்கிக்கிறதுபோல
- ஆமோஸ் 8:10 - ஒரே பிள்ளைக்காகத் துக்கிக்கிற துக்கிப்புக்குச் சமானமாக்கி

இதேபோல கிரேக்கபாஷையிலும் பண்மையில் உள்ள ஒருமையை காண்பிக்கிறதற்கான வார்த்தைதான் 'ஹென்' என்பதாகும் (மாற்கு 12:2; 1 கொரி 8:4; எபே 4:6; யோவான் 10:16; ரோமர் 12:5). அப்படியானால் 'ஒரே தேவன்' என்று மோசே கற்பித்தது திரியேகத்துவம் உள்ள ஒரே தேவனைதான் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் இதைத்தான் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

**தேவ பண்பும், திரியேக தேவனும்**

1. நித்தியமானவர்
    - சங்கீதம் 90:2 - பிதாவானவர்
    - வெளி 1:8,17 - குமாரன்
    - எபி 9:14 - பரிசுத்த ஆவியானவர்
2. சர்வ வல்லவர்
    - 1 பேதுரு 1:5 - பிதாவானவர்
    - 2 கொரிந்தியர் 12:9 - குமாரன்
    - ரோமர் 15:19 - பரிசுத்த ஆவியானவர்
3. சர்வ ஞானி
    - எரேமியா 17:10 - பிதா
    - வெளி 2:3 - குமாரன்
    - 1 கொரி 2:11 - பரிசுத்த ஆவியானவர்
4. எங்கும் நிறைந்தவர் (சர்வ வியாபி)
    - எரேமியா 23:24 - பிதா
    - மத்தேயு 18:20 - குமாரன்
    - சங்கீதம் 139:7 - பரிசுத்த ஆவியானவர்

5. பரிசுத்தம்
    - வெளி 15:4 - பிதா
    - அப்போஸ்தலர் 3:14 குமாரன்
    - லூக்கா 1:15 - பரிசுத்த ஆவியானவர்
6. சத்தியம்
    - யோவான் 7:28 - பிதாவானவர்
    - வெளி 3:7 - குமாரன்
    - 1 யோவான் 5:6 - பரிசுத்த ஆவியானவர்
7. நற்குணம்
    - ரோமர் 2:4 - பிதாவானவர்
    - எபே 5:25 - குமாரன்
    - நெகே 9:20 - பரிசுத்த ஆவியானவர்
8. ஐக்கியம்
    - 1 யோவான் 1:3 - பிதாவானவர்
    - 1 யோவான் 1:3 - குமாரன்
    - 2 கொரிந்தியர் 13:14 - பரிசுத்த ஆவியானவர்

ஆகவே திரித்துவத்தில் உள்ள மூன்று நபர்களும் தெய்வீகத்துவம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். மூவரும் சமமானவர்களாக இருக்கிறார்கள்.

**பரிசுத்த வேதாகமத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவருமே தேவன் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.**

- பிதா தேவன் என்று அழைக்கப்படுகிறார் (யோவான் 16:27)
- இயேசு கிறிஸ்துவானவர் தேவன் என்று அழைக்கப்பட்டு இருக்கிறார் (யோவான் 1:1; 1 யோவான் 5:20; வெளி 21:7; யோவான் 20:28; எபிரேயர் 1:8 அப் 20:28; பிலி 2:6; கொலோ 1:15; 2:9; 1 தீமோ 3:16; தீத்து 2:13; மத்தேயு 1:23; ஏசாயா 9:6)
- பரிசுத்த ஆவியானவர் தேவன் என்று அழைக்கப்படுகிறார் (அப் 5:3-4; ஏசாயா 6:9; அப் 28:25; எரேமியா 31:31-34; எபி 10:15-17)

**திரியேக தேவனின் செயல்பாடு**

1. படைப்பில்
    - பிதாவானவர் படைப்பில் ஈடுபட்டார் (ஆதியாகமம் 1:3)
    - குமாரன் படைப்பில் ஈடுபட்டார் (யோவான் 1:1,3)
    - ஆவியானவர் படைப்பில் ஈடுபட்டார் (ஆதியாகமம் 1:2; 26; யோபு 12,13)
2. இயேசு கிறிஸ்துவின் பிறப்பில்
    - பிதா குமாரனை கொடுத்தார் (யோவான் 3:16)
    - குமாரன் உலகில் பிறந்தார் (லூக்கா 2:11)
    - ஆவியானவர் மரியாள்மீது நிழலிட்டார் (லூக்கா 1:35)
3. மீட்பின் செயலில்
    - பிதா பலியை ஏற்கிறார் (எபி 9:14)
    - குமாரன் பலியாகி செலுத்துகிறார் (எபி 9:14)
    - ஆவியானவர் இயேசு கிறிஸ்துவானவரை பலியாகவும்படி உதவுகிறார் (எபி 9:14)
4. இரட்சிப்பில்...
    - பிதா திரும்பி வருகிறவரை ஏற்கிறார் (லூக்கா 15:22)
    - குமாரன் பாவியைதேடும் மேய்ப்பராயிருக்கிறார் (லூக்கா15:4)
    - ஆவியானவர் முத்திரையிடுக்கிறார் (எபேசியர் 1:13)

5. ஐக்கியத்தில்...
    - பிதாவானவர் ஐக்கியத்திற்கு அழைக்கிறார் (எபே 2:18)
    - குமாரன் ஒப்புரவாக்குகிறார்( 2 கொரிந்தியர் 5:19)
    - ஆவியானவர் ஐக்கியம் ஏற்படுத்துகிறார் (எபேசியர் 2:18)
6. ஜெபத்தில்...
    - பிதா ஜெபத்தை கேட்கிறார் (யோவான் 16:23)
    - குமாரனின் நாமத்தில் ஜெபிக்கிறோம் (யோவான் 16:23)
    - ஆவியானவர் ஜெபிக்க வழிநடத்துகிறார் (ரோமர் 8:26)
7. மறுபிறப்பு நிகழ்வில்...
    - பிதா பரலோகில் நமது பெயரை எழுதுகிறார் (லூக்கா 10:20)
    - குமாரன் இரத்தத்தால் சுத்திகரிக்கிறார் (எபே 1:7)
    - ஆவியானவர் மறுபடி பிறக்கச்செய்கிறார் (யோவான் 3:3-6)

ஆகவே, திரியேக தேவன் ஒன்றாகவே செயல்படுகிறார். மத்தேயு எழுதின சுவிசேஷம் 3:13-17 வரையிலான வசனங்கள் திரியேகத்துவத்தை விசுவாசிப்பதற்கு ஏதுவாக உள்ளது. காரணம் அவ்வசனங்களில் மூவரையும் ஒன்றாக நாம் காணமுடிகிறது. பிதாவானவர் வானத்திலிருந்து பேசுகிறார்; குமாரன் (இயேசு கிறிஸ்துவானவர்) ஞானஸ்நானம் பெறுகிறார்; பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல் இறங்கி வருகிறார். இதை நாம் இப்படியாகச் சொல்லலாம் பிதா, குமாரன், பரிசுத்தஆவியாகிய ஒரே தேவன் ஒரே மேடையில்... என்று கூட சொல்லமுடியும். திரித்துவ போதனையானது எல்லா கிறிஸ்தவ போதனைகளுக்கும் அடிப்படையாகத்திகழ்கிறது. கிறிஸ்தவத்தில் பன்மை இல்லை என்று சொன்னால் கிறிஸ்துவானவர் தேவனாக இருக்கமுடியாது; கிறிஸ்துவானவர் தேவனாக இல்லாவிடில் அவர் பாவங்களுக்காக மரித்திருக்க முடியாது. பரிசுத்த தேவனோடு ஒப்புரவாக செய்திருக்கமுடியாது. எவராவது ஒருவர் கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுதலித்தால் அவர் வேறொரு இயேசுவை பின்பற்றுகிறார்; அவர் வேறு ஒரு ஆவியை பெற்றிருக்கிறார்; அவர் வேறொரு சுவிசேஷத்தை விசுவாசிக்கிறார்; அவர் தன்னுடைய பாவத்தில் இருந்து மரிப்பதே அவரின் இறுதியான முடிவாக இருக்கிறது.

A.